முருகப்பெருமான் துணை
உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான்
ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1396

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.07.2023**, புதன்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா
அறம் காத்துவருகின்ற தேசிகா
மாறுதலை கலியினில் செய்து முடிப்பேன் என
மாதவசியாக வந்த குருராஜா
2. அரசனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும் அருளுவேன் ஞான அறிவுரைஆசி
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 10 ம் நாள், 26.07.2023, புதன்கிழமை)
வரமாக யான் உன்னுள் இருந்து வையகத்தை நீ மாற்றம் செய்யும் வரை
வரையினில் வகைபட வரையறை இன்றி
வல்லமைகூட்டி உன்னோடு ஆக்கமாக இயங்குகின்றேன்
3. இயங்கவே இந்தப்பிறவி தனில்
இயம்பிடுவேன் நீ கொண்ட அவதார நோக்கம்
சிந்தைபட திருச்செந்தூரரான் என்னால்
சித்தியாகும் அச்சம் வேண்டாம் அப்பா
4. அப்பனே உன்வழி உயர்படைகள்
அகிலத்தை ஆளும் ஞானப்படைகளாக
சுப்பன் யான் உருவாக்கி உலகமெல்லாம்
சுத்த சன்மார்க்க நெறி ஆளும் வண்ணம்
5. வண்ணமுடன் அற்புதத்தை நடத்தி முடிப்பேன்
வையகத்தில் அமைதி பாதுகாப்பு நிறைந்த பூமியாக
ஆகவே மாற்றி உலகமெல்லாம்
அரங்கர்மயம் என்கின்ற அற்புதத்தை

**6.** ஏற்கும் வண்ணம் உலகோர்க்கு ஞானம் அருளி
எங்கும் ஞானவான்கள் நிறைந்த புவியாக
ஆகவே மாற்றி உலகமெல்லாம்
ஆளுமையை ஞான ஆட்சியாக மாற்றுவேன்

அறிவித்த ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–